5. அரசினர் தீர்மானம்.

பேரவை விதி 41 (3)-ஐத் தளர்த்தல் குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதி 41 (3)-ன் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களை எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதைத் தளர்த்தவேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க. சுப்பு அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அவர்கள் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதுவதாகச் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எழுதியிருந்தார்கள். முதல் அமைச்சர் அவர்களுக்கும், அவர்களுக்கும் இரண்டு பேர்களுக்கும் ஒத்துவந்துவிட்டது என்று நினைத்தேன். இப்போது அவர்கள் வரவில்லை. ஸோ, நாட் மூவ்ட்.

6. கவன ஈர்ப்பு.

(அ) மதுரை மாநகராட்சியில் பணியாற்றும் அதிகமான தொழில் பழகு ஆசிரியர்கள் முறையாக வேலையில் அமர்த்தப்படாமை குறித்து.

THIRU K. T. K. THANGAMANI: Mr. Deputy Speaker, Sir, under Rule 41 of the Assembly Rules I call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the delay in regularising a large number of Apprentice Secondary Grade Teachers in the Madurai Corporation Schools and the consequent unrest among them.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1970 அக்டோபரில் தொடங்கப்பட்ட தொழில் பழகு ஆசிரியர் திட்டத்தின் கீழ், மொத்தம் ஏறத்தாழ 5,746 ஆசிரியர்கள்

தொழில்பழகு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்களுள் இதுவரை ஏறத்தாழ 3,308 பேர் முறையான ஆசிரியர் பதவிகளில் அமர்த்தப்பட்டுவிட்டனர். எஞ்சியுள்ள தொழில்பழகு ஆசிரியர்கள் 2,438 பேரும் கூடிய விரைவில் முறையான ஆசிரியர் பதவிகளில் அமர்த்தப்பட்டுவிடுவர்.

மதுரை மாநகராட்சி இத்திட்டத்தின் கீழ் 1970 டிசம்பரில் நியமித்த தொழில்பழகு ஆசிரியர்களின் எண்ணிக்கை, பி.டி. 4, செக்ண்டரி கிரேடு 43, ஹையர் கிரேடு 10, ஆக மொத்தம் 57 ஆகும்.

அவர்களுள், தொழில் பழகும் பி.டி. ஆசிரியர் நால்வரும் ஏற்கெனவே முறையான நிரந்தரப் பணியிடங்களில் நியமிக்கப் பட்டுவிட்டனர். மீதி தொழில் பழகு ஆசிரியர்கள் 53 பேரையும் இதுவரையும் முறையான ஆசிரியர் பதவிகளில் அமர்த்த இயலாமைக்கான காரணம் வருமாறு:

தொழில்பழகு ஆசிரியர்கள் பணி செய்யும் எந்நிர்வாகத் தினரும் முறையான ஆசிரியர் பதவிகள் புதிதாக ஏற்படுத்தப்படுமாயினும், காலி விழுமாயினும், அவற்றைப் பின்வரும் வரிசை முறைப்படி நிரப்பவேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

அந்நிர்வாகத்தினால் ஏற்கெனவே முறையான ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்கள் (அவர்கள் தகுதிகாண் பருவத்திலிருப்பினும் சரி, அல்லது அப்பருவத்தைத் தாண்டியிருப்பினும் சரி) எவராவது காலியிடம் இல்லாத காரணத்தால் பணியை விட்டு அனுப்பப்பட்டிருப்பின், அவர்களை முதற்கண் அக்காலியிடங்களில் மீண்டும் நியமிக்கவேண்டும்.

அவ்வாறு நியமித்த பின் மிஞ்சும் காலியிடங்களுக்குத் தொழில்பழகு ஆசிரியர்களை நியமித்திடல் வேண்டும்.

16—3—1970 அன்று மதுரை மாநகராட்சியினால் முறையான ஆசிரியர்களாக நியமிக்கப்பட 63 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தனர். அவர்களுள் 21 பேருக்கு மட்டுமே இதுவரை நிரந்தரப் பணியிடங்கள் தர இயன்றுள்ளது; 22 பேர் விடுப்புப் பணியிடங்களில் பணி செய்கின்றனர்; மீதி 20 பேருக்கு பணி அளிக்க வேண்டியுள்ளது. எனவே தொழில்பழகு ஆசிரியர்கள் 53 பேர்களில் எவருக்கும் முறையான ஆசிரியர் பதவிகள் அளிக்கத்

தொடங்குமுன், 42 நிரந்தரப் பணியிடங்கள் காலி விழுந்து அல்லது புதிதாக ஏற்படுத்தப்பட்டு அவற்றில் மேற்சொன்ன 22-ம், 20-ம் ஆக 42 பேரும் முதற்கண் நிரந்தரப் பணியிடங்களில் அமர்த்தப்படவேண்டும். இக்காரணத்தால்தான் தொழில்பழகு ஆசிரியர்கள் 53 பேரும் தொடர்ந்து தொழில்பழகு ஆசிரியராகவே இருந்து வர நேர்ந்துள்ளது.

இன்னும் தொழில்பழகு ஆசிரியராகவே இம்மாநிலத்தில் இருந்து வரும் மொத்தம் சுமார் 2,438 பேரில் மதுரை மாநகராட்சியின் கீழ் பணி செய்யும் 53 பேரும் அடங்குவர். ஏற்கெனவே கூறியதுபோல அவர்கள் அனைவரையும் கூடிய விரைவில் முறையான ஆசிரியர் பதவிகளில் அமர்த்திட அரசு நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) திருப்பூரில் உள்ள பனியன் தொழிற்சாலை தொழிலாளர் வேலை இழக்காமல் இருக்க அவற்றிற்கு அரசே நூலை வாங்கி நியாயமான விலையில் முன்னதாகவே வழங்குவது குறித்து.

Thiru N. K. PALANISAMY : Sir, I call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the necessity to procure yarn sufficiently in advance by the Government and to distribute the same to 400 Banian Factories and large number of powerloom factories in Tiruppur and surrounding places in order to avoid 30,000 workers from being thrown out of employment.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்பொருள்பற்றி பல உறுப்பினர்கள் 41-வது விதியின்கீழ் அறிக்கைகள் விடுத்ததன் பேரில் அவையில் 3—3—1973 அன்று நடந்த விவாதத்தின்போது நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் பருத்தி நூலைப் பங்கிடு செய்வதற்கு இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஏற்கெனவே விளக்கப்பட்டுள்ளது. அப்போது இம்மாநிலத்திலுள்ள பஞ்சாலைகள் அனைத்தும் தங்களிடமுள்ள இருப்புக்களை மாநில அரசிடம் ஒப்படைக்குமாறு அவற்றை அரசு கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. தென்னிந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின்